கொடுத்தோமே, அந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறதே, அதை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு மிகவும் பின்தங்கிய நிலைமையில் உள்ள மக்களுக்கு இனாமாக வீடுகள் கட்டிக் கொடுக்கவும், அவர்களுக்கென்று தனியாக ஒரு பிரிவை ஆரம்பித்துகூட தற்போது இருக்கக்கூடிய குடிசைகளுக்கு பட்டா வழங்குவதற்கான நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இல்லை என்று சொன்னதற்குக் காரணம், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு நில ஒதுக்கீடு, வீட்டுமனை ஒதுக்கீடு இருக்கிறதா என்பது கேள்வி, ஆகவே நான் இல்லை என்று சொன்னேன். இப்போது இந்த வீட்டுமனை ஒதுக்குகிற திட்டம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தனியாக இல்லை. மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினருக்கு என்று நான் விளக்கம் அளித்திருக்கிறேன். சென்ற ஆண்டு, 1991-92-லே கடந்த ஆறு, ஏழு மாதங்களில் சுமார் 30 இலட்சம் ரூபாய் செலவில் 600 பேர்களுக்கு இந்த வீட்டுமனை ஒதுக்கீட்டிற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு இன்னும் கொஞ்சம் அதிகமாக அந்த வீட்டுமனை கையகப்படுத்துகிற திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பாக அரசுக்குத் தெரிவித்தால் நிச்சயமாக அங்கே நிலம் கையகப்படுத்துகிற திட்டத்தை அரசு நிறைவேற்றும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சீர்மரபினருக்கு வீடுகள் கட்டித் தருகிற திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். நான் பல முறை இந்த மன்றத்திலேயே கேள்விகளுக்குப் பதில் அளித்து இருக்கிறேன். அது, முன்னாலே சுமார் 3 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு, அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. இப்போது 13 ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவு செய்து அப்படிப்பட்ட சீர்மரபினருக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கிற திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அரசு பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது. நிதி வசதி பற்றாக்குறை என்கிற காரணத்தினால் மத்திய அரசினுடைய உதவியையும் மாநில அரசு இப்போது, எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறது.

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 379, திருமதி மரியம்உல் ஆசியா, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

379.—

பள்ளிகளுக்கு தன்னாட்சி அந்தஸ்து வழங்கல்.

*2386—திருமதி மரியம்உல் ஆசியா :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கல்லூரிகளுக்கு தன்னாட்சி அந்தஸ்து அளிக்கப் படுவதைப் போல் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளுக்கும் தன்னாட்சி அதிகாரம் அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அப்படிப்பட்ட எண்ணம் அரசுக்கு இல்லை.

திருமதி மரியம்உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் நல்வாழ்விற்காக பல புரட்சிகரமான திட்டங்களைத் தீட்டி வெற்றிகரமாகச் செயல்படுத்திக் கொண்டு இருக்கும் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் கல்வியினுடைய முன்னேற்றத்திற்காக பல ஆண்டுகளாக சிறந்த முறையில் செயலாற்றிக் கொண்டு இருக்கிற புகழ் பெற்ற பள்ளிகளுக்கு தன்னாட்சி அதிகாரம் வழங்குவதற்கு உயர் கல்வியாளர்களின் குழு அமைத்து, ஆய்வு செய்து அதன்படி, அந்தப் பள்ளிகளுக்குத் தன்னாட்சி அதிகாரம் வழங்க அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளுக்குத் தன்னாட்சி உரிமை தருவது என்பது ஒரு சிறந்த கொள்கைதான் என்றாலும், இப்போது கல்லூரிகளுக்குக் கொண்டு வந்து இருக்கிறோம். அப்படிக் கொண்டு வந்திருக்கிற அந்தக் கொள்கையை இன்னும் முழுமையாக அனைவரும் ஏற்றுக் கொள்ளாத நிலையில் நாம் பள்ளிகளுக்குக் கொண்டு வருவது என்பதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

திருமதி மரியம்உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப் பள்ளிகளுக்குத் தன்னாட்சி அதிகாரம் வழங்குவதற்கு ஏதாவது நிபந்தனைகள் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு முடிவு செய்கிறபோது தான், நாம் நிபந்தனைகளை வரையறுத்து வெளியிட முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞான சேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னாட்சி முறையிலே நவோதயா பள்ளி என்ற ஒன்றை நெடுங்காலத்திற்கு முன்னாலே தமிழகத்திலே

1992 மார்ச் 30]

கொண்டு வருவதற்கு ஏற்கனவே முயற்சி செய்து அந்த முயற்சி கைவிடப்பட்டு இருக்கிறது. மீண்டும் இந்த அரசு நவோதயா பள்ளிகளை தமிழகத்தில் நிறுவுவதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, தன்னாட்சி அந்தஸ்துக்கும் நவோதயாவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 380. டாக்டர் அ. செல்லக்குமார். இருக்கையில் இல்லை.

வினா எண் 381. திரு. தி. சாத்தையா. இருக்கையில் இல்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : Hon. Speaker Sir, I put the Question.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 381, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

381—

மகளிருக்கென தனியாகத் தொழிற்கல்வி நிலையம்.

*5289-ஏ.—திரு. தி. சாத்தையா :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மகளிருக்கென தனியாகத் தொழிற்கல்வி நிலையம் (Polytechnic) சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி போன்ற பெருநகரங்களில் அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை, மதுரை, கோவை, திருச்சி போன்ற பெருநகரங்களில் மகளிருக்கென தனி அரசு பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய நகரங்களிலே மகளிருக்கென பாலிடெக்னிக் இருப்பது எனக்கும் தெரியும். எங்களுக்கும் தெரியும். இருந்தாலும்கூட இன்றைக்கு நாம் நிறைய இனாமாக கல்வி கற்பதற்கு ஏற்பாடு செய்துவிட்டோம். ஆகையினால், பெண்கள் பிளஸ் 2, பி.ஏ., எம்.ஏ., என்று படித்துவிட்டு கல்லூரிகளிலும் வேலை கிடைக்காமல், கல்யாணமும் செய்துகொள்ள முடியாமல் மிகக் கொடுமையான நிலையில் இருக்கின்றார்கள். ஆகையினால் எங்கெங்கே ரிசர்வ் தொகுதி இருக்கின்றதோ அந்தப்